# Annai Hajira Women's College

## Melapalayam, Tirunelveli-05

(A Unit of As-Sathiq Educational Society)

(Affiliated to Manonmaniam Sundaranar University)

# NEWSPAPER CLIPPINGS

## 2018-2019

## DINAMANI 19.09.2018

# அன்னை ஹாஜிரா கல்லூரியில் தூய்மை விழிப்புணர்வு முகாம்

திருநெல்வேலி, செப். 18: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரியில் தூய்மை இந்தியா திட்டம் குறித்த விழிப்புணர்வு முகாம் திங்கள்கிழமை நடைபெற்றது.

மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம் சார்பில் நடைபெற்ற முகாமிற்கு, கல்லூரி முதல்வர் கே. ரஜப்பாத்திமா தலைமை வகித்தார். மண்டல சுகாதார அலுவலர் எம். சாகுல்ஹமீது, சுகாதார அலுவலர் முத்துக்குமார் ஆகியோர் தூய்மை குறித்துப் பேசினர்.

தூய்மை குறித்து நடைபெற்ற வினாடி வினா நிகழ்ச்சியில் வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கைக்கடிகாரம், ரொக்கப் பரிசுகள் வழங்கப்பட்டன. முகாமில், மாணவிகள், பேராசிரியர்கள் பங்கேற்றனர்.

களவிளம்பர பொறுப்பு அலுவலர் ஜெ. போஸ்வெல்ஆசீர் வரவேற்றார். நாட்டு நலப்பணித் திட்ட அலுவலர் த. ராமலட்சுமி நன்றி கூறினார்.

THE HINDU TAMIL 20.10.2018

4 NELLAI
சனி, அக்டோபர் 20, 20

# அன்னை ஹாஜிரா கல்லூரி விழா

திருநெல்வேலி

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் கணினி அறிவியல் துறை சார்பில், கணினி மன்றத் தொடக்க விழா நடைபெற்றது.

கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். தாளாளர் குதா முகம்மது, பொருளாளர் ஹாஜி ஜாபர் சாதிக், துறைத் தலைவர் அனிதா, தூத்துக்குடி காமராஜர் கல்லூரி பேராசிரியர் ஜோசப் விக்டர் ஆகியோர் பேசினர். மாணவி அப்ரின் நன்றி கூறினார்.

இதுபோல், கல்லூரியில் நடைபெற்ற கணித பயிற்சிப் பட்டறையில், திருநெல்வேலி ஸ்ரீசாரதா மகளிர் கல்லூரி கணிதத்துறை தலைவர் அம்மணி சிறப்புரையாற்றினார். துறைத் தலைவர் ரத்தினமாலதி அறிமுக உரையாற்றினார். பேராசிரியர் சாந்தி நன்றி கூறினார்.

# DINAMANI 22.10.2018

## அன்னை ஹாஜிரா கல்லூரியில் கணித பயிற்சி பட்டறை

நெல்லை, அக். 23: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் ஒரு நாள் கணித பயிற்சிப் பட்டறை நடந்தது.

கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது, பொருளாளர் ஜாபர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கணிதவியல் துறைத் தலைவர் (பொறுப்பு) ரத்தின மாலதி அறிமுக உரையாற்றினார். நெல்லை சாரதா மகளிர் கல்லூரி கணிதத்துறை தலைவர் அம்மணி கலந்து கொண்டு 'வேதிக் கணிதம் அறிமுகம்' என்ற தலைப்பில் பேசி மாணவிகளுக்கு வேதிக் கணிதம் குறித்து பயிற்சி அளித்தார்.

கணிதத்துறை பேராசிரியர் சாந்தி நன்றி கூறினார்.


## பிழை திருத்தம்

அங்கீகாரம் பெற்ற அதிகாரி, தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட். திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி அவர்கள் 17.10.2018 தேதிய "தினகரன்" நாளிதழில் வெளியிட்ட **"கடன்தாரர் M/s.ரத்தன மார்டன் ரைஸ் மில்"** கடன்கணக்குகள் சம்பந்தமாக வெங்கடாம்பட்டி கிளை ஏல விற்பனை அறிவிப்பில் பிழைதிருத்தம்.

மேற்படி ஏல விற்பனை அறிவிப்பில் சொத்து எண்.1-ல் ரைஸ்மில் பில்டிங் .எண்.4/221 என குறிப்பிடுவதற்கு பதிலாக, வீட்டு பில்டிங் க.எண்.221 என தவறுதலாக பிரசுரிக்கப்பட்டிருந்தது. எனவே ரைஸ்மில் பில்டிங் க.எண்.4/221 என சரியாக படிக்கவும். மற்ற விவரங்கள் அனைத்தும் மேற்படி தேதியில் வெளியிடப்பட்ட அறிவிப்பில் உள்ளபடியே என தெரிவித்துக் கொள்கிறோம்.

**அங்கீகாரம் பெற்ற அதிகாரி,**
தமிழ்நாடு மெர்க்கன்டைல் பேங்க் லிட்.,
திருநெல்வேலி மண்டலம், திருநெல்வேலி

நாள்: 22.10.2018

# THE HINDU TAMIL 30.10.2018

வெற்றிக் கொடி வழங்கும்

WINNER

நம் கல்லூரியின்

# நட்சத்திர மாணவர்

## அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி, மேலப்பாளையம்

கல்லூரிகளின் பெருமையை உலகறியச் செய்யும் பகுதி!





Er.S.K.சையத் அகமத்
தலைவர்



முனைவர்
க.ரஜப் பாத்திமா
முதல்வர்

மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் அங்கீகாரம் பெற்ற அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி 2004–ல் தொடங்கப்பட்டது. பல்கலைக்கழகத் தரவரிசைப்பட்டியலில் ஒவ்வொரு ஆண்டும் இதன் 15 மாணவர்களாவது இடம் பெறுகின்றனர். இதுவரை, 7 தங்கப் பதக்கங்களைப் பெற்றுள்ளது. மேலப்பாளையத்தில் இஸ்லாமியப் பெண்கள் பட்டம் பெறுவதற்கு இந்தக் கல்லூரியே முக்கிய காரணம்.

## இந்தக் கல்லூரியின் நட்சத்திர மாணவர்கள்:



**இளம் ஜீனியஸ்: ச.பீ.அனீஸ் ரஹ்மான், முதுகலை வணிகவியல், இரண்டாம் ஆண்டு**

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை சார்பில் 2016–ல் நடத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்றார். இந்திய வானொலி நிலையமும் பொதிகை தொலைக்காட்சியும் இணைந்து நடத்திய பேச்சுப் போட்டியில் பரிசு பெற்றார். தமிழக அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் நெல்லை மாவட்ட அளவில் முதல் பரிசு பெற்றார். மக்கள் தொலைக்காட்சியில் உரையாற்றியுள்ளார். தூய சவேரியர் கல்லூரியில் நடைபெற்ற நாடகப் போட்டியில் பங்கேற்று முதல் பரிசு பெற்றுள்ளார்.

**நாளைய தலைவர்: ம.முத்து, இளங்கலை வணிகவியல், இரண்டாம் ஆண்டு**



கைலாசபுரம் பகுதியில் யார் குப்பை கொட்டினாலும் இவர் கண்ணிலிருந்து தப்புவதில்லை. மாநகராட்சி ஊழியர்களை நண்பர்களாக்கிக் கொண்டு எங்கே குப்பை இருந்தாலும் அதை நீக்கி அந்த இடத்தைத் தூய்மையாக்குவார். தற்போது நடைபெற்ற புஷ்கர விழாவில் கைசலாச நகர் பகுதியைத் தூய்மைப்படுத்தியதில் முக்கிய பங்கு இவருக்கு உண்டு.



**இளைய கலைஞர்: ஜோ.கிருத்திகா லெட்சுமி, இளங்கலைக் கணிதம், மூன்றாம் ஆண்டு**

பேரறிஞர் அண்ணாவின் பிறந்த நாளை முன்னிட்டு 2016–ல் முரசொலி அறக்கட்டளை சார்பில் நடத்தப்பட்ட புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டியில் மாவட்ட அளவில் இரண்டாம் பரிசைப் பெற்றார். இந்த ஆண்டு ம.தி.தா இந்துக் கல்லூரி மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்ற பாரதிதாசன் பாடல்கள் ஒப்புவித்தல் போட்டியில் முதல் பரிசு வென்று, சென்னை அறிவாலயத்தில் நடைபெற்ற மாநிலப் போட்டியில் பங்கேற்றார்.

**நட்சத்திர வீரர்: சு.நாகலெட்சுமி, வணிகவியல், இரண்டாம் ஆண்டு**



தற்காப்புக் கலையான டேக்வாண்டோவை ஆறாம் வகுப்பு படிக்கும்போது கற்றுக்கொள்ளத் தொடங்கினார். பள்ளிப் பருவத்திலேயே பல போட்டிகளில் கலந்துகொண்டு பரிசுகளை வென்றுள்ளார். 2017–ல் கன்னியாகுமரி மாவட்டத்தில் நடைபெற்ற மாநில அளவிலான டேக்வாண்டோ போட்டியில் தங்கம் வென்றார். தேசிய அளவில் ஜம்மு காஷ்மீரில் நடைபெற்ற டேக்வாண்டோ போட்டியில் கலந்து கொண்டார். இந்த ஆண்டு வ.உ.சி. மைதானத்தில் நடைபெற்ற மாநில அளவிலான போட்டியில் தங்கப் பதக்கம் வென்றார்.

# DINAKARAN 30.10.2018

### மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா கல்லூரியில்

## முபல்லிகா பட்டமளிப்பு விழா

நெல்லை, அக். 30: நெல்லை மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் முபல்லிகா பட்டமளிப்பு விழா நடந்தது. அஸ்ஸாதிக்கல்விக்கூட்டமைப்பு தலைவர் செய்யது அகமது தலைமை வகித்தார். மாணவிஜெசிமாஜலிலா கிராஅத் ஓதினார். கல்லூரிதாளாளர் முகம்மது முன்னிலை வகித்தார். அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பின் பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி யுஎன்ஓடபிள்யூ நிஸ்வான் துறை ஆய்வாளர் ஹுஸைன் அகமது முனீர், மதுரை, தேனி மாவட்ட யுஎன்ஓட பிள்யூ நிஸ்வான் துறை ஆய்வாளர், மேலப்பாளையம் உஸ்மானியா அரபிக் கல்லூரி பேராசிரியர் முஹம்மது இல்யாஸ் உஸ்மானி ஆகியோர் பேசினர்.

விழாவில் 49 மாணவிகளுக்கு முபல்லிகா பட்டமும், 13 மாணவிகளுக்கு முஅல்லமா பட்டமும் வழங்கப்பட்டது. தமிழ் துறை தலைவர் ஷப்ரின் முனீர் நன்றி கூறினார். முன்னதாக சித்தி மர்ஜான் துஆ ஓதினார்.

# THE HINDU TAMIL 11.11.2018

இந்து தமிழ் திசை

NELLAI 3

ஞாயிறு, நவம்பர் 11, 2018

### இந்து தமிழ் நாளிதழின் 'பெண் இன்று' இணைப்பிதழ் சார்பில்

# நெல்லையில் இன்று மகளிர் திருவிழா

## ● கருத்துரை, பேச்சரங்கம், கலை நிகழ்ச்சிகள், போட்டிகள், பரிசு மழை

■ திருநெல்வேலி

திருநெல்வேலியில் 'இந்து தமிழ்' நாளிதழின் 'பெண் இன்று' இணைப்பிதழ் சார்பில், மகளிர் திருவிழா இன்று நடைபெறுகிறது. கருத்துரை, பேச்சரங்கம், போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், சிறப்புப் பரிசுகள், நிச்சயப் பரிசுகள், சுவையான மதிய உணவு என பலவித மகிழ்வான அனுபவங்களைப் பெற 18 வயதுக்கு மேற்பட்ட மகளிரை, 'இந்து தமிழ்' அன்புடன் வரவேற்கிறது.

திருநெல்வேலி, வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி அரங்கில் இவ்விழா இன்று காலை 9 மணிக்கு தொடங்கி, மாலை 5 மணி வரை நடைபெறுகிறது.

திருநெல்வேலி மாவட்ட குடும்ப நல நீதிமன்ற நீதிபதி சி.பி.எம்.சந்திரா, திருநெல்வேலி மாவட்டம் மகேந்திரகிரியிலுள்ள ஐஎஸ்ஆர்ஓ திரவ இயக்க உந்தும வளாக விஞ்ஞானி எஸ். ராஜேஸ்வரி, திருநெல்வேலி சங்கர்நகர் ஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பொன்விழா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நிறுவன முதல்வர் கல்வியாளர் உஷாராமன் உள்ளிட்டோர் சிறப்பு அழைப்பாளர்களாக பங்கேற்று பேசுகிறார்கள். தொடர்ந்து, வாசகிகளை உற்சாகப்படுத்தும் வகையில் திருநெல்வேலி பெருமாள்புரம் லேடீஸ் கிளப் உறுப்பினர்களின் கண்கவர் கலைநிகழ்ச்சி நடைபெறும்.

அதன்பின், 'யாருக்கு சுமை அதிகம், இல்லத்தரசிகளுக்கா, வேலைக்கு செல்லும் பெண்களுக்கா? என்ற தலைப்பில் கலகலப்பான பேச்சரங்கம் நடைபெறுகிறது. நடுவராக மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரி முதல்வர் க.ரஜப் பாத்திமா பங்கேற்கிறார். பாளையங்கோட்டை காந்திமதி அம்பாள் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியை ஆ.சிவகாமசுந்தரி, திருநெல்வேலி டவுன் எல்ஐசி அலுவலரும், எல்ஐசி உழைக்கும் மகளிர் ஒருங்கிணைப்புகுழு இணை அமைப்பாளருமான எஸ்.ஹேமலதா ஆகியோர் வாதிடுகிறார்கள்.

மதிய உணவுக்குப்பின், திருநெல்வேலி மதிதா இந்துக் கல்லூரி கலைக்குழுவினரின் வண்ணமயமான கலைநிகழ்ச்சிகள், பிற்பகல் 2 மணி முதல் மாலை 5 மணி வரை உடனடிப் போட்டி, திடீர் போட்டி என பல்வேறு போட்டிகள் நடத்தப்படும். போட்டிகளில் பங்கேற்கும் பெண்களுக்கு ஏராளமான பரிசுகள் காத்திருக்கின்றன. நிச்சயப் பரிசுகளும் உண்டு.

விழாவில் 18 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் மட்டும் பங்கேற்கலாம். அனுமதி இலவசம். நிகழ்ச்சிகளை சின்னத்திரை தொகுப்பாளினி தேவி கிருபா தொகுத்து வழங்குகிறார்.

விழாவையொட்டி அமைக்கப்பட்டிருக்கும் அரங்கில், 'தி இந்து' குழும புத்தகங்கள் மற்றும் தமிழ் திசை பதிப்பகம் வெளியிட்டிருக்கும் புத்தகங்கள் விற்பனைக்கு கிடைக்கும்.

நெல்லை மகளிர் திருவிழாவை, இந்து தமிழ் நாளிதழுடன், இந்தியன் ஆயில் நிறுவனம், பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி, மயூரி டிவி ஆகியவை இணைந்து வழங்குகின்றன. போட்டிகளில் வெற்றிபெறும் வாசகிகளுக்கு பொன்வண்டு, சௌபாக்யா, ராஜேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ், பொன்மணி வெட்கிரைண்டர், பிளாசம் கார்டன் சென்டர், ஆப்பிள் குக்வேர், ஆரெம்கேவி, எஸ்விஎஸ்., கலர்ஸ் லைப்ஸ்டைல், மீனாஸ் அப்பளம், கண்மார்க் ஊறுகாய், ருத்ரா வையர்டெக் ஆகிய நிறுவனங்கள் பரிசுகளை வழங்குகின்றன.

# DINAMANI 12.11.2018








▲ 'இந்து தமிழ்'நாளிதழின் 'பெண் இன்று' இணைப்பிதழ் சார்பில், திருநெல்வேலியில் நடந்த மகளிர் திருவிழாவில், மாவட்ட குடும்பநல நீதிமன்ற நீதிபதி சி.பி.எம்.சந்திரா பேசினார். அருகில், எல்ஐசி அலுவலர் எஸ்.ஹேமலதா, இஸ்ரோ விஞ்ஞானி எஸ்.ராஜேஸ்வரி, மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரி முதல்வர் க.ரஜப் பாத்திமா, பாளையங்கோட்டை காந்திமதி அம்பாள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஆ.சிவகாமசுந்தரி, சங்கர்நகர் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பொன்விழா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் உஷாராமன். (அடுத்த படம்) விழாவில் பங்கேற்ற வாசகிகள். படங்கள்: மு.லெட்சுமி அருண்.

### நெல்லையில் 'இந்து தமிழ்' நாளிதழின் 'பெண் இன்று' இணைப்பிதழ் சார்பில் மகளிர் திருவிழா

# பெண்கள் முன்னேற பெண்களே தடையாகக் கூடாது

## ● குடும்பநல நீதிமன்ற நீதிபதி சி.பி.எம்.சந்திரா வலியுறுத்தல்

■ திருநெல்வேலி

"பெண்கள் முன்னேற்றத்துக்கு பெண்களே தடையாக இருக்கக் கூடாது" என்று, 'இந்து தமிழ்' நாளிதழின் 'பெண் இன்று' இணைப்பிதழ் சார்பில், திருநெல்வேலியில் நடந்த மகளிர் திருவிழாவில், மாவட்ட குடும்பநல நீதிமன்ற நீதிபதி சி.பி.எம்.சந்திரா பேசினார்.

திருநெல்வேலி, வண்ணார்பேட்டை பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி அரங்கில், 'இந்து தமிழ்' நாளிதழின் 'பெண் இன்று' இணைப்பிதழ் சார்பில், மகளிர் திருவிழா நேற்று நடைபெற்றது.

### சட்டத்தின் வழி தீர்வு

திருநெல்வேலி மாவட்ட குடும்பநல நீதிமன்ற நீதிபதி சி.பி.எம்.சந்திரா சிறப்புரையாற்றினார். அப்போது, அவர் பேசியதாவது:

வேலைக்குச் செல்லும் பெண்களுக்கும், இல்லத்தரசிகளுக்கும் சுமைகள் உள்ளன. இல்லத்தரசிகள் எல்லா வீட்டு வேலைகளையும் செய்தாலும், அங்கீகாரம் கிடைப்பதில்லை. அவர்களது கருத்தைக்கூட குடும்பத்தினர் ஏற்பதில்லை.

வரதட்சணையின் தாக்கம் இன்னும் உள்ளது. பல்வேறு பிரச்சினைகள் காரணமாக குடும்பநல நீதிமன்றத்தை, பெண்கள் நாடுகின்றனர். இதற்கு, குடும்ப வன்முறை தடுப்புச் சட்டம் மூலம் நீதிமன்றத்தில் தீர்வு காணலாம்.

பாலியல் தொல்லை தரும் நபர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுப்பது மட்டுமின்றி, அவரை பணி நீக்கம் செய்யவும் வாய்ப்பு உள்ளது. அதே சமயம், தவறான புகார் அளிக்கும் பெண்கள் மீதும் நடவடிக்கை எடுக்க முடியும். பெண்கள் முன்னேற்றத்துக்கு பெண்களே தடையாக இருக்கக் கூடாது. இவ்வாறு அவர் பேசினார்.

### அனுபவ அறிவு அவசியம்

சங்கர்நகர் ஸ்ரீஜெயேந்திர சரஸ்வதி சுவாமிகள் பொன்விழா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி முதல்வர் உஷா ராமன் பேசும்போது, "ஒவ்வொரு குடும்பத்தின் வளர்ச்சிக்குப் பின்னாலும் ஒரு பெண் இருக்கிறார் என்பதை மறுக்க முடியாது.

பெண்கள் பல துறைகளிலும் இயங்க கல்வி தேவை. அதே வேளை, பழங்கால பெண்களிடம் இருந்த ஞானம், பொறுமை, அனுபவ ரீதியான கல்வி அறிவை இன்றைய தலைமுறை இழந்துவிடக் கூடாது.

குழந்தைகள் மீது அதிகப்படியான எதிர்பார்ப்புடன் பல பெண்கள் உள்ளனர். தனது ஆசை, எதிர்பார்ப்புகளை குழந்தைகளிடம் திணிக்கக் கூடாது. நம் நாட்டில் பெண்களை சக்தியின் உருவமாக பார்க்கிறோம். உலகத்தை ஆட்டிப் படைக்க நினைக்காமல் அரவணைக்கும் மனப்பான்மையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றார்.

### இஸ்ரோவில் வேலைவாய்ப்பு

மகேந்திரகிரியில் உள்ள இஸ்ரோ திரவ இயக்க உந்தும வளாக விஞ்ஞானி எஸ்.ராஜேஸ்வரி பேசும்போது, "பெண்கள்தான் நாட்டின் தூண்கள். ஆண்களுக்கு இருக்கும் பொறுப்பைவிட, பெண்களுக்கு பொறுப்புகள் அதிகம். விண்வெளித் துறையில் பல்வேறு கல்வித் தகுதியுள்ள பெண்களுக்கு அதிகமான வேலைவாய்ப்புகள் உள்ளன. அதற்கென எழுத்துத் தேர்வு உள்ளது. இத்தேர்வில் பங்கேற்க பெண்களுக்கு விண்ணப்பக் கட்டணம் கிடையாது.

இஸ்ரோ சார்பில் திருவனந்தபுரத்தில் இந்தியன் இன்ஸ்டியூட் ஆஃப் ஸ்பேஸ் டெக்னாலஜி கல்லூரி உள்ளது. பிளஸ் 2 முடித்து நுழைவுத் தேர்வு எழுதி வெற்றி பெற்றால் இக்கல்லூரியில் சேரலாம். கல்விக் கட்டணமே கிடையாது. வேலைவாய்ப்புக்கும் உத்தரவாதம் உள்ளது. எனவே, பெண் குழந்தைகளை நன்றாக படிக்க வைக்க வேண்டும்" என்றார்.

### கலைநிகழ்ச்சிகள்

பெருமாள்புரம் லேடீஸ் கிளப் உறுப்பினர்களின் கலைநிகழ்ச்சி நடைபெற்றது. தொடர்ந்து, 'யாருக்கு சுமை அதிகம்- இல்லத்தரசிகளுக்கா, வேலைக்குச் செல்லும் பெண்களுக்கா?' என்ற தலைப்பில் பேச்சரங்கம் நடைபெற்றது.

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா மகளிர் கல்லூரி முதல்வர் க.ரஜப் பாத்திமா நடுவராகப் பங்கேற்றார்.

பாளையங்கோட்டை காந்திமதி அம்பாள் மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் ஆ.சிவகாமசுந்தரி, எல்ஐசி அலுவலர் எஸ்.ஹேமலதா ஆகியோர் வாதிட்டனர். இல்லத்தரசிகளுக்கே சுமை அதிகம் என நடுவர் தீர்ப்பளித்தார்.

மதிய உணவுக்குப் பின் திருநெல்வேலி ம.தி.தா. இந்துக் கல்லூரி கலைக்குழுவின் கலை நிகழ்ச்சி நடைபெற்றது. ஏராளமான போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டன. விழாவில் பங்கேற்ற அனைவருமே ஏதாவது ஒரு பரிசுடன் திரும்பினர். இந்து தமிழ் மற்றும் காமதேனு வார இதழின் திருநெல்வேலி முகவர் வெங்கடாசலம் - சாந்தி தம்பதியினர் கவுரவிக்கப்பட்டனர்.

### இணைந்து வழங்கியோர்

மகளிர் திருவிழாவை இந்து தமிழ் நாளிதழுடன் இந்தியன் ஆயில் நிறுவனம், பிரான்சிஸ் சேவியர் பொறியியல் கல்லூரி, மயூரி டிவி ஆகியவை இணைந்து வழங்கின. பொன்வண்டு, சௌபாக்யா, ராஜேஷ் எலெக்ட்ரிக்கல்ஸ், பொன்மணி வெட்கிரைண்டர், பிளாசம் கார்டன் சென்டர், ஆப்பிள் குக்வேர், ஆரெம்கேவி, எஸ்வின்ஸ், கலர்ஸ் லைப் ஸ்டைல், மீனாஸ் அப்பளம், கண் மார்க் ஊறுகாய், ருத்ரா வையர்டெக் ஆகிய நிறுவனங்கள் வாசகிகளுக்கு பரிசுகளை வழங்கின.

**DINAKARAN 07.01.2019**

தினகரன் மாநகர்

## மேலப்பாளையம்

# அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் வழிகாட்டுதல் முகாம்

நெல்லை, ஜன. 7: மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் ஓட்டுநர் உரிமம் எடுப்பதற்கான வழிகாட்டுதல் முகாம் நடந்தது. கல்லூரி தலைவர் செய்யது அகமது தலைமை வகித்துப் பேசினார். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது, கல்லூரி பொருளாளர் ஜாபர் சாதிக் ஆகியோர் முன்னிலை வகித்தனர். தமிழ்த்துறைத் தலைவர் ஷப்ரின் முனீர் அறிமுகவுரையாற்றினார்.

சிட்டி டிரைவிங் ஸ்கூல் உரிமையாளர் நயினா முகமது ஓட்டுநர் உரிமம் பெறுவதற்கான வழிமுறைகள் மற்றும் அதன் அவசியம் குறித்து பேசினார். ரோட்டரி சங்கத் தலைவர் வடிவேலு பேசினார்.

இளைஞர் செஞ்சிலுவைச் சங்க அலுவலர் ஆங்கிலத் துறை உதவிப்பேராசிரியர் சோபியா மேரி நன்றி கூறினார்.

# DINAMANI 31.01.2019

## ஸ்ரீசாரதா-ஹாஜிரா கல்லூரிகளிடையே கணித வகுப்பு பரிமாற்றம்




கணித வகுப்பு பரிமாற்ற நிகழ்ச்சியில் பங்கேற்ற ஸ்ரீசாரதா–அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி மாணவிகள்.

**திருநெல்வேலி, ஜன. 30:** பாளையங்கோட்டை ஸ்ரீசாரதா கல்லூரி– மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரிகளில் உள்ள பேராசிரியர்கள் மற்றும் மாணவிகளின் கணித வகுப்பு பரிமாற்ற நிகழ்வின் தொடக்க விழா நடைபெற்றது.

இதில் மூன்றாம் ஆண்டு கணிதவியல் துறையைச் சேர்ந்த மாணவிகள், ஸ்ரீ சாரதா கல்லூரி கணிதத்துறை தலைவர் அம்மணி, உதவிப்பேராசிரியர்கள் வென்னிமலை, சண்முகப்பிரியா, மகாலட்சுமி, அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி உதவிப்பேராசிரியர்கள் ரத்தினமாலதி, முத்துலட்சுமி, அனந்தலட்சுமி, வேம்பு ஆகியோர் கணிதத்துறை சார்ந்த தகவல்களை பரிமாறிக் கொண்டனர்.

நிகழ்ச்சியில் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரித் தலைவர் செய்யது அகமது, பொருளாளர் ஜாபர் சாதிக், தாளாளர் குதா மூகம்மது, முதல்வர் மு.ரஜப் பாத்திமா, ஸ்ரீ சாரதா மகளிர் கல்லூரித் தாளாளர் யதீஸ்வரி சரவணபவப் பிரியா அம்பா, கல்லூரியின் முதல்வர் ஆ.மலர்விழி மற்றும் கணிதத்துறை இயக்குநர் ஆ.முருகலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# DINAMANI 31.01.2019

## மேலப்பாளையம் ஹாஜிரா கல்லூரியில் தீண்டாமை ஒழிப்பு தினம்



அன்னை ஹாஜிரா கல்லூரியில் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கும் மாணவிகள்.

**திருநெல்வேலி, ஜன.30:** மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் மகாத்மா காந்தியின் நினைவு தினத்தையொட்டி தீண்டாமை ஒழிப்பு தினம் புதன்கிழமை கடைப்பிடிக்கப்பட்டது.

இதையொட்டி இரண்டு நிமிடம் மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. தொடர்ந்து மாணவிகள் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்றனர். நிகழ்ச்சியில் கல்லூரித் தலைவர் செய்யது அகமது, பொருளாளர் ஜாபர் சாதிக், தாளாளர் குதா முகம்மது, முதல்வர் மு.ரஜப் பாத்திமா, பேராசிரியர்கள் மற்றும் மாணவிகள் கலந்து கொண்டனர்.

# DINAKARAN 24.02.2019

மேலப்பாளையம்

தினகரன்
24/02/19 Sunday

# அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி பட்டமளிப்பு விழா

## 254 மாணவிகளுக்கு விஜிலா எம்பி பட்டம் வழங்கினார்



மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நடந்த விழாவில் மாணவிக்கு விஜிலா சத்யானந்த் எம்.பி. பட்டம் வழங்கினார்.

**நெல்லை, பிப். 24:** மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் நடந்த பட்டமளிப்பு விழா நடந்தது.

விழாவில் மேலப்பாளையம், உஸ்மானிய்யா அரபிக் கல்லூரி பேராசிரியர் செய்யது முஹம்மது பாஜில் பாக்கவி கிராஅத் ஓதினார். அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். தலைவர் செய்யது அஹமது தலைமை வகித்தார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது, அலாவுதீன், நவாஸ் கான், அஸ்ஸாதிக் கல்விக் கூட்டமைப்பு உறுப்பினர்கள் நிஜாமுத்தீன், முகம்மது ஹனீப், காதர், அமானுல்லாஹ், காஜா நஜிமுத்தீன் முன்னிலை வகித்தனர். முதல்வர் ரஜப் பாத்திமா ஆண்டறிக்கை வாசித்தார். அதிமுக மாநகர் மாவட்ட செயலாளர் தச்சை கணேச ராஜா, அமைப்பு செயலாளர் சுதா பரமசிவன், பேரவை செயலாளர் பரணி சங்கரலிங்கம், மேலப்பாளையம் பகுதி செயலாளர் ஹயாத், மகபூப் ஜான், முஹம்மது மீரா முகைதீன் ஆகியோர் பேசினர்.

மதுரை வணிகவரித் துறை துணை ஆணையாளர் மகேஸ்வரி, தமிழ்நாடு ஜமா அத்துல் உலமா சபை தலைவர் காஜா முஈனுத்தீன் பாக்கவி, மலேசியா கோலாலம்பூர் மஸ்ஜிதே இந்தியா தலைமை இமாம் அஹமது பாஜில் பாக்கவி ஆகியோர் பேசினர்.

காஜா எண்டர்பிரைசஸ் இணை நிர்வாக இயக்குநர் அப்துல் அஜீஸ், மலேசியா, பரக்கத் குரூப் ஆப் நிறுவனங்கள் பங்குதாரர் முஹம்மது ஜமீல், மலேசியா சபாத் கபே நிர்வாக இயக்குநர் செய்யது முகமது அலி, சிங்கப்பூர் சாம் பிரதர்ஸ் நிர்வாக இயக்குநர் முகமது இக்பால் ஆகியோர் கலந்து கொண்டனர். தமிழ்த் துறை தலைவர் ஷப்ரீன் முனீர் நன்றி கூறினார்.

தொடர்ந்து நடந்த பட்டமளிப்பு விழாவிற்கு தலைவர் செய்யது அஹமது தலைமை வகித்தார். விஜிலா சத்தியானந்த் எம்பி, மலேசியா கோலாலம்பூர் மெட்ரோ செக்யூட்டி சர்வீஸ் நிர்வாக் இயக்குநர் அப்துல் காதர் பின் அசன் அலி பட்டம் வழங்கினார். பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்வியியல் கல்லூரி முதல்வர் தாமஸ் அலெக்ஸாண்டர் பேசினார். விழாவில் 254 மாணவிகள் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் பெற்றனர்.

# DINATHANTHI 25.02.2019



## இருபெரும் விழா

நெல்லை, பிப்.25–

நெல்லையை அடுத்த மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரியில் ஆண்டு விழா மற்றும் பட்டமளிப்பு விழா ஆகிய இருபெரும் விழா நடைபெற்றது. ஆண்டுவிழாவிற்கு தலைவர் செய்யது அகமது தலைமை தாங்கினார். கல்லூரி தாளாளர் குதா முகம்மது, அலாவுதீன், நவாஸ் கான், அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு உறுப்பினர்கள் நிஜாமுத்தீன், முகம்மது ஹனீப், ஜனாப் காதர், அமானுல்லாஹ், காஜா நஜிமுத்தீன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். அஸ்ஸாதிக் கல்வி கூட்டமைப்பு பொருளாளர் ஜாபர் சாதிக் வரவேற்றார். மேலப்பாளையம் உஸ்மானிய்யா அரபிக் கல்லூரியின் பேராசிரியர் பாஜில் பாக்கவி கிராஅத் ஓதினார். கல்லூரி முதல்வர் ரஜப் பாத்திமா ஆண்டறிக்கை வாசித்தார்.

காஜா எண்டர்பிரைசஸ் பிரைவேட் லிமிடெட் இணை நிர்வாக இயக்குனர் அப்துல் அஜீஸ், மலேசியா பரக்கத் குருப் ஆப் நிறுவனங்கள் பங்குதாரர் முகம்மது ஜமீல், மலேசியா சபாத் கபே நிர்வாக இயக்குனர் செய்யது முகமது அலி, சிங்கப்பூர் சாம் பிரதர்ஸ் நிர்வாக இயக்குனர் முகமது இக்பால் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டனர்.

இதில் தச்சை கணேசராஜா, சுதா பரமசிவன், பரணி சங்கரலிங்கம், ஹயாத், மகபூப்ஜான், முகம்மது மீரா முகைதீன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மதுரை வணிகவரி துறை துணை ஆணையாளர் மகேஸ்வரி, தமிழ்நாடு ஜமா அத்துல் உலமா சபை தலைவர் காஜா முஈனுத்தீன் பாக்கவி, மலேசியா கோலாலம்பூர் மஸ்ஜிதே இந்தியா தலைமை இமாம் அகமது பாஜில் பாக்கவி ஆகியோர் சிறப்புரையாற்றினர். முடிவில் தமிழ்த்துறை தலைவர் ஷப்ரீன் முனீர் நன்றி கூறினார்.

தொடர்ந்து நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் விஜிலா சத்யானந்த் எம்.பி. சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மலேசியா கோலாலம்பூர் மெட்ரோ செக்யூரிட்டி சர்வீஸ் நிர்வாக இயக்குனர் அப்துல்காதர் பின் அசன் அலி மாணவிகளுக்கு பட்டம் வழங்கினார். பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்வியியல் கல்லூரி முதல்வர் தாமஸ் அலெக்சாண்டர் பேசினார். விழாவில் 254 மாணவிகள் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் பெற்றனர்.

# THE HINDU TAMIL 08.03.2019

# துலுக்கர்பட்டியில் ஹாஜிரா கல்லூரி என்எஸ்எஸ் முகாம்

■ திருநெல்வேலி

மேலப்பாளையம் அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம் துலுக்கர்பட்டியில் 7 நாள் நடைபெற்றது.

முகாம் தொடக்க விழாவில் கல்லூரி முதல்வர் கே.ரஜப் பாத்திமா வரவேற்றார். கல்லூரி தலைவர் எஸ்.கே.செய்யது அகமது தலைமை வகித்தார். கல்லூரி செயலாளர் எஸ்.கே.குதா முகம்மது முன்னிலை வகித்தார். பொருளாளர் ஒ.கே. ஜாபர் சாதிக் வாழ்த்துரை வழங்கினார். கால்நடை மருத்துவ கல்லூரி பேராசிரியர் ரவி முருகன், அன்னை ஹாஜிரா பெண்கள் கல்லூரி தமிழ்த்துறை உதவி பேராசிரியர் சு.உமா, யோகா பயிற்சி நிபுணர் டி.மனோகரன், டாக்டர் பிரேமச்சந்திரன், சித்த மருத்துவ கல்லூரி மருத்துவர் மனோகரன், கடம்பன்குளம் அரசு மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியர் சுந்தரம், துலுக்கர்பட்டி ஆதிதிராவிடர் நலத்துறை பள்ளி தலைமையாசிரியர் நோபல், ஆசிரியர் செந்தில், வழக்கறிஞர் ரவி ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

மக்களின் வாழ்வாதார கணக்கெடுப்பு நடத்தப்பட்டது. விழிப்புணர்வு பேரணிகளும் நடத்தப்பட்டன. திருநெல்வேலி டாக்டர் அகர்வால் கண் மருத்துவமனை சார்பில் இலவச கண் பரிசோதனை முகாம் நடத்தப்பட்டது. ஏற்பாடுகளை கல்லூரி என்எஸ்எஸ் அலுவலர் த.ராமலெட்சுமி செய்திருந்தார்.